ஸ்டெயின்லஸ் ஸ்டீல்

*243. வினா—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிற்கு ஆண்டொன்றுக்கு எவ்வளவு டன் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் தகடுகள் (Stainless Steel sheets) கொடுக்கப்படுகின்றது?

(இ) தமிழகத்தின் தேவை எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தமிழ்நாட்டிற்கு ஆண்டு ஒன்றுக்கு இவ்வளவு டன் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் தகடுகள் என்று ஒதுக்கப்படுவதில்லை.

(இ) தமிழகத்தின் மொத்தத் தேவை ஆண்டொன்றுக்கு 51,800 மெட்ரிக் டன்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கேள்வியையும் எடுத்து கொள்ளலாம்.

*244 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆர்க்காடு மாவட்டம், காட்பாடியில் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் தொழிற்சாலை எப்போது ஆரம்பிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மதராஸ் ஸ்டெயின்லஸ் ஸ்டீல்ஸ் லிமிடெட் கம்பெனிக்கு 1963-ம் ஆண்டில் 7,000 டன் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் தகடுகள் செய்ய உரிமம் வழங்கப்பட்டது. உரிமம் நீடித்தம் சம்பந்தமாக இந்திய அரசுக்குச் சிபாரிசு செய்து எழுதியுள்ளோம். இந்திய அரசு மேற்படி நிறுவனத்தில் தொழில் நுட்பம், பொருளாதாரம் ஆகிய தன்மைகளைப்பற்றிய குறிப்புகளைக் கேட்டிருக்கிறது. இது சம்பந்தமாக திரு. தஸ்டூர் கம்பெனியிடம் தற்போதுள்ள நிலைமையைக்கொண்டு மேற்படி நிறுவனத்தின் தொழிற் நுட்பம் பொருளாதாரம் ஆகிய தன்மைகளை ஆய்ந்து "மறு மதிப்பீடு" அறிக்கை ஒன்றைத் தயாரிக்குமாறு கேட்டுள்ளோம். இவ்வறிக்கையைப் பெற்றவுடன் அதைப் பரிசீலனை செய்த பின் மீண்டும் இந்திய அரசுக்கு எழுதலாம்.

திரு. ஏ. எம். இராஜா : தமிழ் நாட்டில் போதிய அளவுக்கு ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் தகடுகள் கிடைக்கவில்லை என்று ஸ்டெயின்லஸ் ஸ்டீல் சாமான்களைத் தயாரிக்கும் தொழிலதிபர்கள் புகார் செய்திருக்கிறார்களா? நம்முடைய தமிழ் நாட்டிற்குத் தேவையான அளவுக்கு மத்திய அரசிடமிருந்து ஸ்டெயின்லஸ் ஸ்டீல் தகடுகள் பெற்றுத் தருவதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது?

1970 செப்டம்பர் 5]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த ஸ்டெயின்லஸ் ஸ்டீல் உபயோகத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பது மத்திய சர்க்காரி னுடைய கொள்கை. இந்தக் கொள்கையின் அடிப்படையிலே இன்னென்ன பொருள்கள்தான் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் தகடுகள் மூலம் உற்பத்தி செய்வதற்கு அனுமதி வழங்கவேண்டும். வேறு தொழில்களுக்கு அனுமதி வழங்கக்கூடாது என்று மத்திய சர்க்கார் ஆணை பிறப்பித்திருக்கிறது. அப்படி குறிப்பிட்ட தொழில்களுக்கு மட்டும் நாம் சிபார்சு செய்கிறோம். இதைப் பின்பற்றுகின்ற முறை யில் அவர்கள் குறிப்பிடுகின்ற தொழில்களுக்கு அனுமதி வேண்டும் என்று கேட்பார்கள். அதற்கு ஈ.ஸி. எஸென்ஷியாலிடி சர்டிபிகேட்ஸ் என்ற முறையில் நாம் கொடுக்கிறோம். நாம் கொடுத்ததற்குப் பின்னால் மத்திய அரசின் இலாகாவிற்குச் சென்று, அவர்கள் அனுமதி வழங்குகிறார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தமிழ் நாட்டில் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் தகடுகள் பெறுகிற மொத்த வியாபாரிகளில் முதல் ஐந்து பேர்களைச் சொல்ல முடியுமா? இப்படித் தகடுகளை வாங்கிக் கொண்டு சாமான்களைச் செய்யாமல் அப்படியே விற்றுவிடுகிறார் களே, அவர்களைக் கண்காணிப்பதற்கு அரசு என்ன ஏற்பாடு செய் திருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தத் தகடுகளைப் பொறுத்த வர்கள் இன்னென்ன பொருள்களைச் செய்யவேண்டும் என்று அதில் குறிப்பிடப்படுகிறது. அவைகளைச் செய்கிறார்களா, இல்லையா என் பதை நம்முடைய அரசு கண்காணிக்கின்றது. அப்படிச் செய்யாமல் மொத்தமாக தகடுகள் விற்பவர்களுடைய அனுமதியை நாம் ரத்து செய்து, அவர்கள்மீது வழக்குப் போடுவதற்கு நமக்கு அதிகாரம் இருக்கிறது. இது அப்போதைக்கப்போது கண்காணிக்கப்படுகிறது. முறைப்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. டி. மார்டின் : அமைச்சர் அவர்கள் பதில் கூறியபொழுது எஸென்ஷியாலிடி சர்டிபிகேட்கள் கொடுக்கப்படுகின்றன என்று கூறினார்கள். இந்த சர்டிபிகேட்கள் என்ன அடிப்படையில் கொடுக்கப்படுகின்றன ? தற்சமயம் ஸ்டென்லஸ் ஸ்டீல் சாமான்களின் விலை அதிகமாக உயர்ந்திருக்கிறது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியானால் அதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முன்னாலேயே விளக்கினேன். இது மத்திய அரசாங்கத்தின் கொள்கை. அவர்கள் குறிப்பிட்ட சில பொருள்களைத் தவிர வேறு எந்தப் பொருள்களைச் செய்வதற்கும், உதாரணமாக ஹாஸ்பிடல் வேர்ஸ், யுடென்ஸில்ஸ், பாத்திரங்கள் செய்வதற்கு புதியதாக எந்த அனுமதியையும் கொடுக்கக்கூடாது, 20—1—1969-க்குப் பின்னாலே என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார் கள். இதற்கு முன்னாலே நாம் 1968–69-ம் ஆண்டில் கொடுத் திருக்கக்கூடிய ஈ.ஸி. எஸென்ஷியாலிடி சர்டிபிகேட்சின் மதிப்பு ரூ. 2,33,93,200. கிட்டத்தட்ட 39,000 மெட்ரிக் டன் நம்முடைய புதிய தொழிற்சாலைகளுக்குத் தேவை. நாம் ஈ.ஸி. கொடுத்திருக் கிறோம் மத்திய அரசின் ரெட் புக் பாலிஸிபடி. இதையெல்லாம் ஏற்றுக்கொள்வதற்கு சம்மதிப்பதற்கு மறுத்து விடுகிறார்கள்.